# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2013 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, திருமணப் பதிவு (திருத்தச்) சட்டம்*

---

*(2013 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013, மே மாதம் 10 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2013 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, திருமணப் பதிவு (திருத்தச்) சட்டம்**

[2013 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 6/2013

**(112 ஆம் அத்தியாயமான) திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தினை திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1**. இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, திருமணப் பதிவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2013, சனவரி 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(112 ஆம் அத்தியாயமான) திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (112 ஆம் அத்தியாயமான) திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

> "(6) இருபத்திமூன்றாம் பிரிவின் (1), (2) அல்லது (3)ஆம் பிரிவின்கீழ், விடயத்துக்கேற்ப, ஒரு பிரிவின் பதிவாளருக்கான அல்லது ஒரு மாவட்டப் பதிவாளருக்கான ஒவ்வோர் அறிவித்தலும், அல்லது அதன் (4) ஆம் உட்பிரிவின் கீழான ஒவ்வோர் அறிவித்தலும், முறையே பத்து ரூபாவான பணத்தொகையின் அல்லது முப்பது ரூபாவான பணத்தொகையின் அல்லது அமைச்சரினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையின் கொடுப்பனவுக்கான எண்பிப்பாக, விடயத்துக்கேற்ப, அத்தகைய பிரிவின் பதிவாளரினால் அல்லது அத்தகைய மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்பட்ட ஒரு பற்றுச்சீட்டுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.".

(112 ஆம் அத்தியாயத்தின்) 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(4) வெளிப்படுத்துகையானது மாவட்டப் பதிவாளரின் முன்னிலையில் செய்யப்படுமிடத்து, வெளிப்படுத்துகையைச் செய்யும் திறத்தவர் நூறு ரூபாவை அல்லது அமைச்சரினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய தொகையைச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், வெளிப்படுத்துகையானது ஒரு பிரிவினது பதிவாளர் முன்னிலையில் செய்யப்படுமிடத்து, நூறு ரூபாவான பணத்தொகையினதான அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினதான கொடுப்பனவுக்கான எண்பிப்பாக மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்பட்ட ஒரு பற்றுச்சீட்டுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(5) அமைச்சர், திருமணம் நடைபெற்ற தேதியிலிருந்து ஏழு நாட்களினுள் திருமணக்கூற்றின் இணைப்பிரதியைப் பதிவேட்டுப் புத்தகத்திலிருந்து தனிவேறாக்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய திருமணத்தைப் பதிவுசெய்வதற்காக அத்தகைய பதிவாளருக்குச் செலுத்தப்படற்பாலதும், அமைச்சரினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியதும், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதுமான ஒரு கட்டணத்துடன் சேர்த்து, திருமணமானது, எந்த மாவட்டப் பதிவாளரின் மாவட்டத்தினுள் நடைபெற்றதோ அந்த மாவட்டப் பதிவாளருக்கு அதனை அனுப்புதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(2) பெண் திறத்தவர் முற்போந்த உட்பிரிவில் விவரிக்கப்பட்ட வகுப்பொன்றல்லாத வகுப்பொன்றைச் சேர்ந்தவராகவிருக்கும் விடயத்தில் அல்லது மாவட்டப் பதிவாள

ரின் அபிப்பிராயத்தில் இவ்வுட்பிரிவின் நன்மைகளுக்கு உரித்துடையவராகவிராத விடயத்தில், மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவான பணத்தொகையின் அல்லது அமைச்சரினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு தொகையின் கொடுப்பனவுக்கான எண்பிப்பாக மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்பட்ட ஒரு பற்றுச்சீற்றுடன் விண்ணப்பம் சேர்த்தனுப்பப்பட வேண்டிய உட்கருதப்பட்ட திருமணத்திற்கான திறத்தவர்களுள் ஒருவரின் அவ்விண்ணப்பத்தின்மேல், திறத்தவர்கள் விரும்பக்கூடிய அத்தகைய இடத்திலும் நேரத்திலும் உரிமத்தில் அவர்கள் பெயர் குறிப்பிடப்படக்கூடியவாறும் திருமணத்தை நடாத்துவதற்குப் பதிவாளரொருவருக்குத் தத்துவமளிக்கின்ற அவ்வுரிமத்தை வழங்குதல் மாவட்டப் பதிவாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 51ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51ஆம் பிரிவு அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(2) ஒவ்வோர் எழுத்திலான விண்ணப்பம் தொடர்பிலும் அதன் ஒவ்வோர் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரித்தெடுத்த பகுதி தொடர்பிலும், அமைச்சரினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை விண்ணப்பகாரர் செலுத்துதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "இரண்டாம் அட்டவணையில் எடுத்துக் கூறப்பட்ட கட்டணங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சரினால் காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்படக் கூடிய இரண்டாம் அட்டவணையில் எடுத்துக்கூறப்பட்ட கட்டணங்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்

**8**. 2006ஆம் ஆண்டின் 36ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :-

"இரண்டாம் அட்டவணை (பிரிவு 62)

| | எந்த கடமைக்காக | எவருக்குச் செலுத்தப் படற்பாலது | எவரினால் செலுத்தப்படற் பாலது | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | அவரது அலுவலகத்தில் அல்லது வேறேதேனும் இடத்தில் திருமண அறிவித்தலொன்றை பதிதல். | பதிவாளர் | விண்ணப்பகாரர் | 100.00 |
| 2. | அவரது அலுவலகத்தில் அல்லது வேறேதேனும் இடத்தில் திருமண அறிவித்தலொன்றை பதிதல். | மேலதிக மாவட்டப் பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளர் | விண்ணப்பகாரர் | 100.00 |
| 3. | திருமண அறிவித்தலின்மீது பதிவாளரின் சான்றிதழை வழங்குதல் | பதிவாளர் | திருமணத்துக்கான திறத்தவர்கள் | 100.00 |
| 4. | திருமண அறிவித்தலின்மீது பதிவாளரின் சானறிதழை வழங்குதல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளர் | திருமணத்துக்கான திறத்தவர்கள் | 100.00 |
| 5. | அவரது அலுவலகத்தில் திருமணத்தை நடாத்துதல் | பதிவாளர் | திருமணத்துக்கான திறத்தவர்கள் | 750.00 |
| 6. | பதிவுசெய்யப்பட்ட பொது வழிபாட்டிடமொன்றில் நடைபெற்ற திருமணத்தைப் பதிவுசெய்தல். | மாவட்டப் பதிவாளர் | திருமணத்துக்கான திறத்தவர்கள் | 750.00 |
| 7. | அவரது அலுவலகத்தில் திருமணத்தை நடாத்துதல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளர் | திருமணத்துக்கான திறத்தவர்கள் | 750.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | 38 ஆம் பிரிவின்கீழ் அவரது அலுவலகத்துக்கு வெளியே திருமணத்தை நடாத்துதல் | பதிவாளர் | திருமணத்துக்கான திறத்தவர்கள் | 1,500.00 |
| 9. | 38 ஆம் பிரிவின்கீழ் அவரது அலுவலகத்துக்கு வெளியே திருமணத்தை நடாத்துதல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் அல்லது மாவட்டப் பதிவாளர் | திருமணத்துக்கான திறத்தவர்கள் | 1,500.00.”. |

செல்லுபடியாகுதல்.

**9**. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு சனவரி 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது விதிப்பதற்கு அல்லது சேகரிப்பதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்காக பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் விதிக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட எவையேனும் கட்டணங்கள், பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எவரேனும் ஆளினால் செல்லுபடியான முறையில் விதிக்கப்பட்டதாக அல்லது சேகரிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், மேற்கூறப்பட்ட காலப்பகுதியின்போது விதிக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் கட்டணம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*